கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

முன்னிலை: திரு.ஜி.சரண்,B.L., P.G.Dip.in Env.Law.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் (முழு கூடுதல் பொறுப்பு)

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

இ.எ எண்.02/2024

(உள்) நிறைவேற்றுகை எண்.47/2023 உள் (அசல் வழக்கு எண்.78/2016)

எம்.பிரேம்குமார் ...மனுதாரர்/எதிர்மனுதாரர்/ பிரதிவாதி.

...எதிர்..

சி.அன்பழகன் ...எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி.

இந்த இடைக்கால மனு கடந்த 13.12.2024 ம் தேதியன்று இந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பால்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.ஜெயபிரகாஷ் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த மனுவில் இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்

## உத்தரவு

1. இந்த இடைக்கால மனுவுடன் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர்உரையினை ஏற்றுக் கொண்டு, இந்த நிறைவேற்றுகை மனுவில் மனுதாரர்/எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக கடந்த 21.08.2024 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 106–ன்படி இம்மனு மனுதாரர்/எதிர்மனுதாரர்/ பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்/எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:

மனுதாரர் நிறைவேற்றுகை மனுவில் எதிர்மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். இந்த மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிறைவேற்றுகை மனுவானது எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருந்ததில் கடந்த 21.08.2024 ம் தேதியன்று இந்த நீதிமன்றத்தில் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிர்உரையினை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றையதினத்திற்கு முன்பாகவே மனுதாரர்/பிரதிவாதிக்கு ஏற்பட்டிருந்த வைரஸ் காய்ச்சல் காரணமாக திண்டுக்கல்லில் உள்ள ஷோபா மருத்துவமனையில் கடந்த 20.08.2024 ம் தேதி முதல் 23.08.2024 ம் தேதி வரை சிகிச்சை பெற்று வந்ததால் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி நிறைவேற்றுகை மனுவில் தனது தரப்பு ஆட்சேபணை உரையை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இயலாமல் போய்விட்டது. அது சம்பந்தமாக மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தனது வழக்கறிஞருக்கும் தெரிவிக்க இயலாமல் போய்விட்டது. எனவே அன்றையதினம் இந்த மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதிரய அழைத்து நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் இந்த நிறைவேற்றுகை மனுவில் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதியை ஒருதலைப்பட்சமாக அறிவித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. இந்த நிறைவேற்றுகை மனுவில் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது. இம்மனுவை அனுமதிக்காது போனால் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும். எனவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர்உரையின் சுருக்கம்:

இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி நிறைவேறுதல் மனுவில் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் வாதி ஆவார். இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களை கோரி தாக்கல் செய்திருந்த அசல் வழக்கில்

மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யாத காரணத்தினால் அசல் வழக்கில் கடந்த 20.04.2017 ம் தேதியன்று எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டு, அதன் பின்னர் மேற்படி ஒருதலைப்பட்ச தீர்ப்பானது மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்த இ.ம.எண்.125/2017 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் ரத்து செய்யபட்டு, அதன் பின்னரும் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி அசல் வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டு, இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் வாதுரை பேசப்பட்டு கடந்த 03.03.2022 ம் தேதியன்று இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வழங்கி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பிற்கு பின்னரும் பிரதிவாதி கிரைய ஆவணம் எழுதிக் பதிவு செய்து கொடுக்க முன்வராததால் இந்த நீதிமன்றம் மூலம் கிரைய ஆவணம் எழுதிப் பதிவு செய்து கொடுக்க வேண்டுமென்று கோரி இந்த எதிர்மனுதாரர்/வாதி நிறைவேற்றுகை மனு எண்.158/2022 தாக்கல் செய்திருந்ததில், மேற்படி நிறைவேறுதல் மனுவில் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி வாதுரை செய்ய முன்வராததால் 23.09.2022 ம் தேதியன்று வரைவு கிரைய பத்திரம் 30.09.2022 ம் தேதியன்று தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டது. அதன் பின்னர் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வரைவு கிரையப்பத்திரம் தாக்கல் செய்து அது ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் சீரான கிரையபத்திரம் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டு, அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேறுதல் மனுச்சொத்துக்கள் இந்நீதிமன்றத்தால் இந்த எதிர்மனுதாரரின் பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்டு பதிவும் செய்யப்பட்டு விட்டது. மேற்படி நிறைவேற்றுகை மனு எண்.158/2022 மனுவில் நான் இந்த நீதிமன்றத்தின் மூலமாக பதிவு செய்து பெறப்பட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் நிறைவேறுதல் மனு சொத்துக்களின் சுவாதீனத்தை பிரதிவாதி எவ்வித வில்லங்கமும் இன்றி எதிர்மனுதாரரிடம் ஒப்படைக்ககோரி நிறைவேறுதல் மனு தாக்கல் செய்திருந்தார். வழக்கு சொத்தை இந்த எதிர்மனுதாரருக்கு ஒப்படைக்க இந்த நீதிமன்றம் உத்தரவிட்ட பின்பு அவசர கதியாக இந்த எதிர்மனுதாரருக்கு மன உளைச்சலையும், பொருட்செலவையும் ஏற்படுத்துவதற்காகவே பிரதிவாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். நிறைவேற்றுதல் மனுவின் நடவடிக்கைகளை

மேலும் காலதாமதப்படுத்தும் நோக்கத்தில் இந்த மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி சுத்தமான கரங்களுடன் இந்த நீதிமன்றத்தை அணுகவில்லை. எனவே இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. இனி இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?என்பதேயாகும்.

5. மனுவானது உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 106–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

6. இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிறைவேற்றுகை மனுவானது எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருந்ததில் கடந்த 21.08.2024 ம் தேதியன்று இந்த நீதிமன்றத்தில் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிர்உரையினை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்ததில், அன்றையதினத்திற்கு முன்பாகவே மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ஏற்பட்டிருந்த வைரஸ் காய்ச்சல் காரணமாக திண்டுக்கல்லில் உள்ள ஷோபா மருத்துவமனையில் கடந்த 20.08.2024 ம் தேதி முதல் 23.08.2024 ம் தேதி வரை சிகிச்சை பெற்று வந்ததால் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி நிறைவேற்றுகை மனுவில் தனது தரப்பு ஆட்சேபணை உரையை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இயலாமல் போய்விட்டதாகவும், இந்த நிறைவேற்றுகை மனுவில் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு நல்ல எதிர்வாதம் உள்ளதாகவும், எனவே இம்மனுவை அனுமதிக்க வேண்டும் எனவும் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

7. இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களை கோரி தாக்கல் செய்திருந்த அசல் வழக்கில் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யாத காரணத்தினால் அசல் வழக்கில் கடந்த 20.04.2017 ம் தேதியன்று எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு

வழங்கப்பட்டு, அதன் பின்னர் மேற்படி ஒருதலைப்பட்ச தீர்ப்பானது மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்த இ.ம.எண்.125/2017 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் ரத்து செய்யப்பட்டு, அதன் பின்னரும் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி அசல் வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டு, இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் வாதுரை பேசப்பட்டு கடந்த 03.03.2022ம் தேதியன்று இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வழங்கி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி தீர்ப்பிற்கு பின்னரும் பிரதிவாதி கிரைய ஆவணம் எழுதிக் பதிவு செய்து கொடுக்க முன்வராததால் இந்த நீதிமன்றம் மூலம் கிரைய ஆவணம் எழுதிப் பதிவு செய்து கொடுக்க வேண்டுமென்று கோரி இந்த எதிர்மனுதாரர்/வாதி நிறைவேற்றுகை மனு எண்.158/2022 தாக்கல் செய்திருந்ததில், மேற்படி நிறைவேறுதல் மனுவில் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி வாதுரை செய்ய முன்வராததால் 23.09.2022ம் தேதியன்று வரைவு கிரைய பத்திரம் 30.09.2022ம் தேதியன்று தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டதாகவும், அதன் பின்னர் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வரைவு கிரையப்பத்திரம் தாக்கல் செய்து அது ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் சீரான கிரையபத்திரம் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டு, அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேறுதல் மனுச்சொத்துக்கள் இந்நீதிமன்றத்தால் இந்த எதிர்மனுதாரரின் பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்டு பதிவும் செய்யப்பட்டு விட்டதாகவும், மேற்படி நிறைவேற்றுகை மனு எண்.158/2022 மனுவில் இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி இந்த நீதிமன்றத்தின் மூலமாக பதிவு செய்து பெறப்பட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் நிறைவேறுதல் மனு சொத்துக்களின் சுவாதீனத்தை மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி எவ்வித வில்லங்கமும் இன்றி எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதியிடம் ஒப்படைக்ககோரி நிறைவேறுதல் மனு தாக்கல் செய்திருந்தார் எனவும், வழக்கு சொத்தை இந்த எதிர்மனுதாரர்/வாதியிடம் ஒப்படைக்க இந்த நீதிமன்றம் உத்தரவிட்ட பின்பு அவசர கதியாக இந்த எதிர்மனுதாரருக்கு மன உளைச்சலையும், பொருட்செலவையும் ஏற்படுத்துவதற்காகவே மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், நிறைவேற்றுதல் மனுவின் நடவடிக்கைகளை மேலும்

காலதாமதப்படுத்தும் நோக்கத்தில் இந்த மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும் போது, மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி நிறைவேற்றுகை மனு நடவடிக்கையின் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜராகாததால் அவருக்கு எதிராக கடந்த 21.08.2024 ம் தேதியன்று ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி அவ்வாறு பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்து மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி நிறைவேற்றுகை மனுவினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. வழக்கு ஆவணங்களையும், இந்த மனுவின் தன்மை சூழ்நிலையை கருத்தில் கொண்டு பார்க்கும் போது, மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி இந்த நிறைவேற்றுகை மனுவினை மேல்நடத்துவதற்கு ஒரு வாய்ப்பு வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு உரிய செலவுத்தொகையினை செலுத்தும்பட்சத்தில் இந்த மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு ரூ.2,500/- யை செலவுத்தொகையாக மூன்று நாட்களில் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், அவ்வாறு மூன்று நாட்களுக்குள் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையை செலுத்தாத பட்சத்தில் இந்த மனு தள்ளுபடி செய்யப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் நாளான இன்று திறந்த மன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G SARAN Digitally signed by G SARAN Date: 2025.01.03 17:35:01 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.
(முழு கூடுதல் பொறுப்பு).

இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை.

G SARAN Digitally signed by G SARAN Date: 2025.01.03 17:35:10 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.
(முழு கூடுதல் பொறுப்பு).

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.
இ.எ.எண்.02/2024 (உள்)
நிறைவேற்றுகை மனு எண்.47/2023
(உள்) (அசல் வழக்கு எண்.78/2016)
உத்தரவு நாள் 03/01/2025.

| | |
|---|---|
| | கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல். |
| | இ.எ.எண்.02/2024 (உள்) நிறைவேற்றுகை மனு எண்.47/2023 (உள்) (அசல் வழக்கு எண்.78/2016) |
| | நாள் 03.01.2025 |
| | திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு பகரப்பட்டது.<br><br>முடிவாக, மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு ரூ.2,500/– யை செலவுத்தொகையாக மூன்று நாட்களில் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், அவ்வாறு மூன்று நாட்களுக்குள் மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையை செலுத்தாத பட்சத்தில் இந்த மனு தள்ளுபடி செய்யப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது.<br><br>கூடுதல் மாவட்ட நீதிபதி,<br>திண்டுக்கல்.<br>(முழு கூடுதல் பொறுப்பு) |